10T2 காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2014

www.tnschools.co.in

பதிவு எண்

வகுப்பு 10

நேரம்: 2.30 மணி **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள்: 100

**(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)**

**அறிவுரை:** 1. அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** *i)* இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

*ii)* விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

*iii)* வினா எண் 38க்கு என படிவம் ஒன்று தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதை நிரப்பி முதன்மை விடைத்தாளுடன் இணைக்கவும்.

## பிரிவு - I (மதிப்பெண்கள் - 20)

www.tnschools.co.in

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) எதிர்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) எழுது ஆ) எழுதினான் இ) எழுதுவான் ஈ) எழுதுகிறான்

2) கீழ்வருவனவற்றுள் பொதுமொழியைத் தேர்ந்தெடு.
அ) கண் ஆ) வைகை இ) தேர்வு எழுதினான் ஈ) செய்தான்

3) கீழ்வருவனவற்றில் உவமைத் தொகையை எடுத்து எழுதுக.
அ) செய்தொழில் ஆ) மதிமுகம் இ) பால்பழம் ஈ) தாயும் சேயும்

4) மகிழ்ச்சிப் பொருளில் வரும் அடுக்குத்தொடரை தேர்ந்தெடு.
அ) போ போ ஆ) பட பட இ) வருக வருக ஈ) தீ தீ தீ

5) வினைச்சொல்லைத் தேர்ந்தெடு.
அ) சென்ற கோதை ஆ) ஓடிச்சென்றான் இ) நல்ல மாணவன் ஈ) வந்தனள் பாடினள்

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிறைவு செய்க:** 5×1=5

6) மருளும் - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் ............
7) தொழிலைக் குறிக்கும் சொல் ............
8) ஆய்தக்குறுக்கம் பெறும் மாத்திரை ............
9) ''செய்'' என்ற சொல்லின் வினையெச்சம் ............
10) ''முழவு உறழ் தடக்கை'' இதில் அமைந்துள்ள உவமஉருபு ............

### பகுதி - 3

10×1=10

11) வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றனுக்குச் சான்று தருக.
12) முகமதின் மலரடி வணங்கி - **இப்பாடலடியில் அமைந்துள்ள உவமைத்தொகையை உருவகமாக மாற்றுக.**
13) **தொகைச் சொல்லை விரித்து எழுதுக:** ஐம்பால்
14) **கலவைத் தொடராக மாற்றுக:** முருகன் இரவும் பகலும் படித்தான். கூடுதல் மதிப்பெண் பெற்றான்.
15) **பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக:** நான் இந்தக் காலேஜின் ஓல்டு ஸ்டூடண்ட்.
16) **ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக:**
இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றது.
17) **சந்திப்பிழை நீக்கி எழுதுக:**
திரைபடம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
18) **வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக:** எகன மொகனயாய் பேசுகிறான்.
19) **பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக:** கண்டனன்
20) **மரபுத்தொடர் குறிக்கும் பொருளை எழுதுக:** ஆகாயத் தாமரை

## பிரிவு - II (மதிப்பெண்கள் - 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க:** 5×2=10

21) ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
22) முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
23) ஒன்றொழிப் பொதுச்சொல்லை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
24) விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
25) அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
26) ஐய வினாவை எடுத்துக்காட்டுடன் விளக்கு.
27) இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு கொடு.

## பிரிவு - III (மதிப்பெண்கள் - 50)

**குறிப்பு:** பகுதி - 3ல் வினா எண் 35-ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க:** 2×5=10

28) அறுவகை வினாக்களையும் எடுத்துக்காட்டுடன் விளக்கு.
29) வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்கு. **(அல்லது)**
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை - **இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்கு.**
30) அருவினை என்ப உளவோ கருவியாற்
காலம் அறிந்து செயின் - **அலகிட்டு வாய்ப்பாடு தருக.**

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க:** 2×5=10

31) பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டினை விவரி.
32) அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்களில் இரண்டினைக் குறித்து எழுதுக.
33) கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதனை விளக்குக.

www.tnschools.co.in

பகுதி - 3

34) அ) **கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:** 3+2=5
சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே?
வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால் தான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடைச்சுதா? பஸ் டென் தர்ட்டிக்கு வரும் லாஸ்ட்வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

ஆ) **கீழ் உள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுக:** 55, 20, 780, 311

35) அ) **கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க:** 3+2=5
The television is one of the wonders of modern India. Many useful programs on education, health, agriculture and family planning one specially prepared for rural viewers. Interesting dramas and films are shown at regular intervals. The television is also used commercial advertisements.

ஆ) **கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக:**
i) Barking dog seldom bite. ii) Money makes many things.
iii) Knowledge is power. iv) Tit for tat.

குறிப்பு: **காதுகேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.** 5×1=5

சின்னச்சாமி, இலக்குமி அம்மையார் ஆகியோருக்கு 11.12.1882 இல் பாரதியார் பிறந்தார். பிறந்த ஊர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டையபுரம். இவர் இளமையிலேயே ஆங்கிலக் கல்வியை அறவே வெறுத்தார். பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்து பாரதி என்னும் பட்டம் பெற்றார். அவர் சில காலம் எட்டையபுரம் அரசவைக் கவிஞராக விளங்கினார். பின்னர் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

1. பாரதியாரின் தாய் தந்தையர் யாவர்?
2. பாரதியார் எங்கு எப்போது பிறந்தார்?
3. பாரதியார் எதனை வெறுத்தார்?
4. பாரதியார் பெற்ற பட்டம் யாது?
5. பாரதியார் எங்கு பணியாற்றினார்?

பகுதி - 4

***கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க:*** 1×5=5

36) அ) **கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பு தருக.**
கடுமையாக மழை பெய்து கொண்டிருந்தது. அப்போது சாலையோரத்தில் கொட்டும் மழையில் மூதாட்டி ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அந்நிகழ்வைக் கண்ட ஒரு பெண்மணி .............

**(அல்லது)**

ஆ) **கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு மிகாமல் கவிதை ஒன்று எழுதுக:**
இயற்கை **(அல்லது)** கடல்

பகுதி - 5

37) **கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏதேனும் ஐந்து நயங்களை எடுத்தெழுதுக:** 1×5=5

பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வரிந் நினைவகற் றாதீர்
பாரத நாடு பார்க்கெல்லாம் திலகம்
நீரதன் புதல்வரிந் நினைவகற் றாதீர்
வானை முட்டும் இமயமால் வரையும்
ஏனைய திசைகளில் இருந்திரைக் கடலும்
காத்திடும் நாடு! கங்கையும் சிந்துவும்
தூத்திரை யமுனையும் சுனைகளும் புனல்களும்
இன்னறும் தொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு.

- பாரதியார்

பகுதி - 6 1×5=5

38) கொடுக்கப்பட்டுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக. பெயர் நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக. (ரூ. 25,000/-)

பகுதி - 7

39) அ) **கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க:** 3+2=5
மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்கு தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால் உண்மையைச் சொல்ல மறுக்கிறான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்கச் செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?
2. நாம் எப்படிப்பட்ட நண்பர்களோடு நட்புக் கொள்ள வேண்டும்?
3. இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?

ஆ) **கீழ்க்காணும் சூழ்நிலையைப் படித்து வினாக்களுக்கு உம் கருத்தை எழுதுக:**
வயது முதிர்ந்த ஒருவர் பேருந்தில் ஏறி பயணித்தார். பேருந்திலிருந்த ஒருவரும் அவருக்கு இடமளிக்க முன்வரவில்லை.

1. இச்சூழலில் நீ என்ன செய்வாய்? 2. பிறர்க்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?

**பிரிவு - IV (மதிப்பெண்கள் - 20)**

பகுதி - 1

40) ***கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க:*** 1×10=10

அ) பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக்கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

பகுதி - 2

41) ***ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக:*** 1×10=10

அ) அறிவியல் - வாழ்வியலில் அறிவியல் - கண்டுபிடிப்புகள் - பயன்கள் - தீமைகள் - வாழ்வியலில் பயன்பாடு - அறிவியலில் புதுமைகள். **(அல்லது)**

ஆ) முன்னுரை - சிக்கனமும் சிறுசேமிப்பும் - சேமிப்பின் நோக்கம் - சேமிப்புப் பற்றிய பழமொழிகள் சேமிக்கும் வழிகள் - சேமிப்பின் பயன்கள் - நிறுவனங்கள் சேமிப்பின் இன்றியமையாமை - முடிவுரை.

-¶-«-¶-«-¶-«-